திட்டுக்கள் , பூங்காக்கள், நீர் ஊற்றுகள் போன்றவைகளை அமைக்க நகராட்சியால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கின்றது. ஈரோடு பெரியார் மாவட்டத்தின் தலைநகராக இருக்கின்ற காரணத்தினால் பல்வேறு பணிகளைத் துரிதமாகச் செய்ய வேண்டும் என்பதற்காக இந்த நகராட்சி அதற்காக திட்டங்களை வகுத்து செயல்பட்டுக் கொண்டு வருகின்றது.

திரு. ச. பாலகிருஷ்ணன்: தலைவர் அவர்களே, ஈரோடு பெரியார் மாவட்டத்தின் தலைநகராக இருப்பதால் அங்கே பல்வேறு பகுதிகளில் இருந்தும் மக்கள் அடிக்கடி வந்துபோவதால், அங்கே போக்குவரத்து நெரிசல் இருந்து கொண்டிருக்கிறது. மேலும் அங்கு தற்போது பிரதான சாலைகளில் மட்டும்தான் சோடியம் வேப்பர் விளக்குகள் போடப்பட்டுள்ளன. நகரத்திலே உள்ள எல்லா தெருக்களிலும் இந்த சோடியம் வேப்பர் விளக்குகளை அமைக்க ஏற்பாடு செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: பேரவைத் தலைவர் அவர்களே, சோடியம் வேப்பர் ஆவி விளக்குகளை நாம் போடுவதினுடைய நோக்கமே., சாலைப் போக்குவரத்து எங்கு அதிகமாக இருக்கிறதோ அந்தப் பகுதியிலே மட்டும் விளக்குகளை போடவேண்டுமென்று ஒரு குறிப்பு அனுப்பப்பட்டிருக்கிறது. அதற்குக் காரணம் எந்தவிதமான விபத்துக்களும் ஏற்படாமல் தடுப்பதற்காகவும், மழைக் காலங்களில் தெருக்கள் சுத்தமாக மழை பெய்தாலும் கூட வாகனங்கள் போக்குவரத்திற்கு இடைஞ்சல்கள் இல்லாமல் வருகின்ற காரணத்தினால்தான், சோடியம் ஆவி விளக்குகளை அதிகமாக உபயோகிக்க வேண்டுமென்ற ஒரு குறிப்பு சொல்லப்பட்டு இருக்கிறது. ஆகவே, எல்லா சாலைகளுக்கும், சோடியம் ஆவி விளக்குகளைப் போடுவது என்பது இயலாத காரியம். ஒரு சோடியம் ஆவி விளக்கின் விலை ஏறக்குறைய 4,500-லிருந்து 5,000 ரூபாய் வரையில் விலையாகிறது. ஆகவே எல்லா இடத்திலும் அந்த விளக்குகளைப் போடுவது என்று சொன்னால் நிதிநிலைமை சரியாக இருக்காது.

பாலக்கரையிலிருந்து நல்லாம்பட்டி செல்ல புதிய சாலை அமைக்கும் திட்டம்.

* வினா எண். 652—திரு.தி. கா. நல்லப்பன் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) பெருந்துறை ஒன்றியம் பாலக்கரையிலிருந்து நல்லாம்பட்டி செல்ல புதிய ரோடு போட ரூபாய் ஒரு லட்சம் ஒதுக்கப்பட்டும் வேலை நடைபெறாமல் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில் அதன் காரணம் என்ன ?

1982 மார்ச் 25]

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) மற்றும் (ஆ) : சாலை அமைக்கப்படவுள்ள இடத்தில் ஒரு லட்சம் மதிப்பீட்டில் ஆக்கிரமிப்புகளை அகற்ற நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. வாய்க்காலில் தற்போது தண்ணீர் ஓடிக்கொண்டுள்ளதால் சாலை அமைக்கப்படவுள்ள பகுதிகளில் கசிவு நீர் குட்டைபோல் தேங்கியுள்ளது. எல். பி. பி. வாய்க்காலில் ஏப்ரல் 1982-ல் தண்ணீர் நிறுத்தப்பட்டவுடன் மேற்படி வேலை துவங்கி முடிக்கப்படும்.

திரு. தி. கா. நல்லப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பாதை அமைப்பதற்காக, முன்னாள் பெரியார் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களும், பொதுப்பணித் துறை பொறியாளர் அவர்களும், நெடுஞ்சாலைப் பொறியாளர் அவர்களும், அன்றையதினம் இருந்த ஊராட்சி ஆணையாளர் அவர்களும், அந்த இடத்திற்கு நேரிலே சென்று அங்கே உள்ள மக்களைப் பார்த்த பின்புதான் நிதி ஒதுக்கப்பட்டது. இன்றையதினம் வாய்க்காலிலே தண்ணீர் இல்லை. இது ஏதோ காரணத்தால் காலம் கடத்திவிட்டு, சபைக்கு வேண்டுமென்ற அளவிற்கு இந்த பதிலை அதிகாரிகள் தயாரித்துக் கொடுத்திருக்கிறார்கள். ஆகவே உடனடியாக பாதை அமைப்பதற்காக ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் போன்றவர்கள் எல்லாம் வளர்ச்சி மன்றக் கூட்டத்திலேயும், அதே நேரத்தில் ஆட்சித் தலைவர் அவர்கள் இடத்திலே எடுத்துச் சொன்னதற்குப் பின்னாலே, கடந்த 25—5—1981-லே 1 இலட்சம் ரூபாய் இதற்காக ஒதுக்கப்பட்டது. அதற்குப் பின்னாலே, எல்.பி.பி. கால்வாயிலே தண்ணீர் விடப்பட்ட காரணத்தால், அந்த வேலையை துவங்க முடியவில்லை. ஆனால் இன்னும் ஒருசில நாட்களில் தண்ணீர் விடுவது நிறுத்தப்படும் என்று நான் நினைக்கிறேன். அப்படி நிறுத்தப்பட்டால் உடனடியாக வேலை துவங்கப்படும்.

திரு. தி. கா. நல்லப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நல்லாம்பட்டியிலிருந்து பாலக்கரைக்கும், பாலக்கரையிலிருந்து நல்லாம்பட்டிக்கும், இந்த ரோடு அமைக்கப்படாமல் ஏறக்குறைய 2 கிலோ மீட்டர் தூரத்தை, 10, 15 கிலோ மீட்டர் சுற்றிவந்துதான் அந்த ஊருக்குச் செல்லவேண்டிய ஒரு அவல நிலை இருக்கின்ற காரணத்தால் உடனடியாக அங்கிருக்கும் அதிகாரிகளை துரிதப்படுத்தி, அந்த வேலையை செய்ய ஏற்பாடு செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, நான் மீண்டும் அந்த உறுதியினை அளிக்கிறேன். கண்டிப்பாக வேலை துவங்கப்படும்.

LEGISLATURE ... ALONE TRIUMPHS